# குங்குலியக் கலய நாயனாரின் ஆளுமை

# Persanolity of Kunguliya Kalaya Nayanar

**முனைவர் வெ. விஜயலட்சுமி**, தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், பூ.சா.கோ கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் 641 014

**Dr V.Vijayalakshmi**, Assistant Professor in Tamil Department, PSG Arts and Science College, Coimbatore – 641014

ORCiD: https://orcid.org/0000-0001-6719-8144

**DOI : 10.5281/zenodo.7000400**

## Abstract

In this period when the literary reading of the Bhakti movement is decreasing, the life history of the Nayanmars and the life history of the Azhwars should be spread among the people, which serve as an incentive to read devotional literature. Moreover, it is a matter for everyone to know that the life of servants is designed to develop humanity, reveal personality and stimulate social thinking. It is necessary for today's literary reader to fully appreciate the beauty of Tamil language. Bhakti literature subtly reveals the beauty of the sound of words, the beauty of word combinations, the beauty of the sharpness of the combination and concept. This review is a face to reveal the character of the life of Kunkuliyak Kalaya Nayanar and the personality of Nayanar as depicted by Shekchilar in his big legend.

## ஆய்வுச்சுருக்கம்

பக்தி இயக்கத்தின் இலக்கிய வாசிப்பு குறைந்து வரும் இக்காலகட்டத்தில் மக்களிடையே பக்தி இலக்கியங்களை வாசிக்கத் தூண்டுகோலாக விளங்கும் நாயன்மார்களின் வாழ்க்கை வரலாறும் ஆழ்வார்களின் வாழ்க்கை வரலாறும் பரவ வேண்டும். மேலும், அடியார்களின் வாழ்வு மனிதநேயத்தை வளர்ப்பதாகவும், ஆளுமைத் தன்மையை வெளிப்படுத்துவதாகவும், சமுதாயச் சிந்தனையைத் தூண்டுவதாகவும் அமைந்திருப்பது அனைவரும் அறிய வேண்டிய ஒன்று. தமிழ் மொழியின் அழகினை முழுதும் உணர்வது இன்றைய இலக்கிய வாசகனின் அவசியமாகிறது. சொற்களின் ஒலி அழகினை, சொல் இணைவுகளின் அழகினை, அணி மற்றும் கருத்து சென்று சந்திக்கும் கூர்மையின் அழகினை பக்தி இலக்கியங்கள் நுட்பமாக வெளிப்படுத்துகின்றன. குங்குலியக் கலய நாயனாரின் வாழ்வினை சேக்கிழார் தம் பெரிய புராணத்தில் சித்திரித்துள்ள பாங்கினையும், நாயனாரது வாழ்க்கை வரலாற்றுடன் ஆளுமைத்திறனையும் வெளிப்படுத்தும் முகமாக இவ்வாய்வு அமைகிறது

**திறவுச் சொற்கள்**

குங்குலியம், திருப்பணி, திருவமுது, வழிபாடு, ஆளுமை.

**முன்னுரை**

உலக மக்கள் இனிது வாழும் வகையில் இறைவன் திருவருளால் தோன்றியவையே பக்தி இலக்கியங்கள். இறைவனின் தன்மைகளையும், வழிபடும் நெறிமுறைகளையும், அவர் அருள் செய்த திறத்தினையும் விளக்குகின்ற வகையில் இவை அமைந்துள்ளன. அவ்வகையில் தமிழ் மக்களில் உத்தமர்களாக விளங்கிய திருத்தொண்டர் புராணத்தை சீர்பெற எடுத்தியம்பும் வகையில் அறுபத்திமூன்று நாயன்மார்களையும் பெருமைப்படுத்தும் முகமாகவும், இவ்அறுபத்து மூவருள் ஒருவரான குங்குலியக்கலய நாயனாரின் ஆளுமைத் திறனை வெளிப்படுத்தும் வகையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**சோழ நாட்டுத்திருக்கடவூரின் வளம்**

நீர் நிறைந்ததால் மிகுதியாக வளத்தை பெற்ற, காவிரி ஆறு பாய்கின்ற, சோழ நாட்டில் சிறந்த வேதியர்கள் வாழ்கின்ற, உயர்ந்த மதில்களை உடைய ஊர் திருக்கடவூர். அலைவீசும் நீர் பொருந்திய கங்கையை அணிந்த நீண்ட சடாமுடியை உடையவரும், தன் பக்தனான மார்க்கண்டேயனது உயிரைக் கொள்வதற்காக வந்த எமனை உதைத்த சிவந்த திருவடிகளை உடைய இறைவனும் நிலைபெற்று வாழக்கூடிய ஊர் திருக்கடவூர்.

**“வயலெல்லாம் விளைசெஞ் சாலி வரம்பெலாம் வளையின் முத்தம்**
**அயலெலாம் வேள்விச் சாலை அணையெலாங் கழுநீர் கற்றை…  (பெ.பு.பாடல் 837)**

மிக்க செழிப்பும் வளமும் கொண்ட திருக்கடவூரில் எக்காலத்தும் வயல்களில் எல்லாம் சாலி என்ற நெற்பயிர்கள் நிறைந்திருக்கும். வரப்புகளில் சங்குகளும், அவை ஈன்ற முத்துக்களும் நிறைந்திருக்கும். வயல்களின் பக்கங்களில் எல்லாம் வேள்விச் சாலைகள் விளங்கும். அணைகள் எங்கும் செங்கழுநீர் மலர் கூட்டம் விளங்கும். காட்டைப் போன்ற பாக்கு மரங்களின் உச்சிகள் எல்லாம் மேகங்கள் விளங்கும்.

**ஆறுவகைத் தொழில்கள் செய்த அந்தணர்கள்**

இத்தகு சிறப்பின் மிக்க வளம் பொருந்திய திருக்கடவூரில் அதன் பெருமையைச் சாற்றும் வகையில் அந்தணர்கள் ஆறு தொழில்கள் (புறவேள்விகள் 5:- பித்ரு வேள்வி, பிரம்ம வேள்வி, தேவ வேள்வி, மானுட வேள்வி (விருந்தோம்பல்), பூதவேள்வி (காக்கை முதலியவற்றுக்கு உணவிடல்), இதனோடு அக வேள்விகளான ஓதல், ஓதுவித்தல், கேட்டல், கேட்பித்தல், சிந்தித்தல் ஆகியனவற்றையும்) புரிபவராகத் திகழ்ந்தனர். பூணூல் அணிந்த மார்பினை உடைய மறையவர் வேதச் சடங்குகள் செய்யும் இடங்கள் தோறும் சாம வேதத்தின் பாடல் ஓசை ஒலிக்கும்.

சிறந்த நீண்ட காம்புகளை உடைய எருமைகள் பால் சுரந்த நீர் நிலைகளில் செங்கயல் மீன்கள் பார்த்தால் அந்த மணம் கமழும் தாமரை மலர்களும் அந்த இனிய பாலின் மணமே உடையனவாக இருக்கும் மேகம் தவழும் உயர்ந்த மாளிகைகளை உடைய வேலைகளின் பக்கத்தில் சிறிது ஒதுங்கும் மேகங்களும் அவை பெய்த நீரும் புகையும் கொண்டதாக விளங்கும்.

**கலயர் குங்குலியத் திருப்பணி செய்தல்**

பொருந்திய செல்வத்தால் மிக்க வளம் கொண்ட நகரில் வாழும் அரிய மறை விதிப்படி பூணூல் அணிந்த மார்பினை உடைய அந்தணர்கள் கலைஞர் என்று அழைக்கப்படுவர் அவர் கங்கை ஆற்றை அணியும் சடையை உடைய சிவபெருமானின் திருவடிகளைப் போற்றி நாளும் உருகிய அன்பு மிக்க உள்ளத்தை உடையவராய் சைவ ஒழுக்கம் மிக்கவராய் திகழ்ந்தார்.

“பாலனாம் மறையோன் பற்றப் பயங்கெடுத்து அருளும் ஆற்றல்

மாலும்நான் முகனும் காணா வடிவுகொண்டு எதிரே வந்து... **(பெ.பு.பாடல் 841)**

அந்தணச் சிறுவனான மார்க்கண்டேய முனிவர் தழுவிகொண்டதால் அவரது அச்சம் முழுவதையும் அழித்து அருள்செய்த முறையால் திருமாலும் நான்முகனும் காணாத வடிவத்தைக் கொண்டு வெளிப்பட்டு காலனை உதைத்து உருட்டி கூற்றுவன் தன்உயிரைப் போக்கிய சிவபெருமானுக்கு மனம் மிகுந்த குங்கிலியம் மிகவும் நிறைந்து வீசும்படியாக இடும் திருப்பணியில் நின்றவரானார்.

அவர் கங்கை ஆற்றின் நீர் ஒலிப்பதற்கு இடமான திருமுடியையும் நெற்றிக்கண்ணை உடைய எம்பெருமானுக்கு மென்மேலும் விரிந்து பரந்து கிளம்பும் குங்கிலிய தூபத்தை சிறப்புற்று விளங்குமாறு செலுத்திவந்தார். அத்தகைய காலத்தில் இறைவனது திருவருளால் அவருக்கு வறுமை வந்துசேர்ந்தது. அதன் பின்னும் வறுமைவருவதற்கு முன் தாம் செய்து வந்ததைப்போல திருப்பணி தவறாது செய்துவந்தார்.

**கலய நாயனாரின் ஆளுமை**

இங்ஙனம் கலயர் ஒழுகி வந்த காலத்தில் வறுமை மிகவும் அதிகமானது. ஆதலால் தம் நல்ல நிலங்களையெல்லாம் விற்றும் திருப்பணி செய்தார். அப்பெரிய செல்வங்கள் முழுதும் தீர்ந்துபோயின. அதனால் இல்வாழ்க்கையில் இவர் சுற்றத்தாருடன் மக்களும் வருந்தினர்.

**மனைவியின் தாலிக்கு குங்குலியம் பெறல்**

இரண்டுபகல் உணவில்லாது வருந்தும் மைந்தர்களோடு பெரிய சுற்றத்தாரையும் பார்த்து நாயனாரின் மனைவியார் தம் கணவரான நாயனாரின் கையில் குற்றமற்ற மங்கலக் கயிற்றினைத் தந்து இதற்கு நெல்லை வாங்கிவாருங்கள் என்றார். அப்போது அந்தத்தாலியைக் கொண்டு நெல்லை வாங்குவதற்காக குங்குலியக்கலயர் சென்றார்.

அப்போது அவர் எதிரே ஒரு வணிகன் குங்குலியப் பொதியுடன் வந்து சேர்ந்தான். இந்த மூட்டையாது? என்று கேட்டதற்கு, அவன் உள்ளபடி சொன்னான். அதைக்கேட்டு பூணூல் அணிந்த மார்புடைய கலயர் முகமலர்ச்சியுடன் கங்கையை சிவந்த சடைமீது வைத்த அங்கணரான சிவபெருமானின் பூசைக்கு ஏற்ற நறுமணமுள்ள குங்கிலியம் இதுவாயின் நான் பெரும்பேற்றைப் பெற்றவன் ஆவேன்.

பெறுவதற்கு அரிய இப்பேற்றைப் பெற்றபின்பும் இனிபெறத்தக்க வேறுபேறு உளதோ? என்று எழும் பெருவிருப்பத்தில் மிக்கவராய் கலயர் அவனைப் பார்த்து நான் உமக்கு பொன்னைத்தர நீர்எமக்கு இந்தக் குங்குலியத்தைத் தாரும் என்று சொன்னார்.

“பொன்தரத் தாரும் என்று புகன்றிட வணிகன் தானும்
என்தர இசைந்தது என்னத் தாலியைக் கலயர் ஈந்தார்.... **(பெ.பு.பாடல் 847)**

அப்போதே அவன் அந்தத்தாலியை வாங்கிக்கொண்டு குங்கிலிய மூட்டையைத் தந்தான். அதைப்பெற்றுக் கொண்ட கலயர் அங்கே சற்றும் நில்லாமல் உள்ளத்தில் நிறைந்த மகிழ்ச்சியுடன் விரைவாகச் சென்றார்.

தமக்கு ஒப்பில்லாத சிவபெருமானின் வீரட்டானத் திருக்கோயிலுக்கு விரைவாகச் சென்று தன்னை அடிமையாக உடையவரும், நம்மை ஆளுகின்ற ஒருவருமாகிய இறைவரின் பண்டாரத்தில் அந்தமூட்டையை அளித்த பின்பு எல்லாவற்றையும் மறந்து எழுகின்ற அன்பு மிக இறையடிகளைத் துதித்த வண்ணம் அங்கேயே இருந்தார்.

**இறைவன் நாயனாருக்குப் பெருஞ்செல்வம் நல்குதல்**

கலயரின் மனைவியாரும் மக்களும் பசியால் வாட்டமடைந்து அன்று இரவு அயர்ந்து உறங்கினர். அப்போது நல்ல தவத்தின் கொடிபோன்ற அவரது கனவில் இறைவன் தோன்றி செல்வம் உள்ளதை உணர்த்தினார். கனவில் கண்டவாறு அங்கிருந்த செல்வங்களான, அழகிய பொருளும் நெல்லும் அரிசியும் முதலான எல்லாம் எம்பெருமானின் திருவருளே என்று எண்ணி

இருகைகளையும் தலைமேல் குவித்து துதித்து நாயகரான உப்பில்லாத பெரியகணவருக்கு உணவுசமைக்க சமையல் அறையை அடைந்தார். கூற்றுவனை உதைத்தகாலை உடைய இறைவன் திருவடியில் நிறைந்த அன்பு பூண்ட உள்ளமுடைய கலய நாயனார் அறியுமாறு, நீ உன் அகன்ற பெரிய வீட்டில் சேர்ந்து பாலுடன் கலந்த இனிய உணவை உண்டு பசித்துன்பம் நீக்குவாயாக என்று அருளினார்.

இறையருளின்படி கலயனார் தம் இல்லத்தை அடைந்து உள்ளே புகுந்தார். பெரிய செல்வக் குவியல்கள் உடன்மற்ற செல்வங்கள் எல்லாவற்றையும் பார்த்து வில்போன்ற நெற்றி உடைய பெண்ணே இவை எல்லாம் எவ்வாறு இங்கு வந்தன என வினவினார். அவர் கரிய இருள்நிறம் கொண்ட நீலகண்டரான எம்பெருமான் அருளால் செல்வமெல்லாம் வந்தன என்றுரைத்தார்.

மின்னை ஒத்த இடைகொண்ட அம்மையார் இவ்வாறு கூற, சிறப்புமிக்க கலயனார் பெற்ற பெருஞ்செல்வ வளமிக்க சிறப்பைப்பார்த்து என்னையும் ஆட்கொண்ட எந்தையும், எம்பெருமானும், ஈசனுமான சிவபெருமான் திருவருள் நினைந்து மகிழ்ந்தார்.

**கலயர் அடியாருடன் திருவமுது செய்தல்**

தாமரையில் வீற்றிருக்கும் திருமகளை விட சிறந்த அம்மையார் உண்கலமான வாழைக்குருத்தைத் திருத்தி அமைத்துக்கொண்டு விரைவாகத் தம்கணவரை சிவனடியாருடனும் அமரச் செய்து, விதிப்படி தீபம் முதலியவை ஏந்தி பூஜை செய்து இன்னமுதைப்படைத்தார். வேதத்தில் வல்லவரும் அதனை உண்டு மகிழ்வுற்றார்.

கலயர் ஊர்கள் தோறும் போய் பிச்சை ஏற்றவரான சிவபெருமானின் திருவருளால் இந்த உலகம் நிறைந்த செல்வமுடைய தன்மையில் மிகுந்த சிறந்த அமுதினை நல்ல தயிர், நெய், பால் இவற்றுடன் மிகுந்த அன்புடன் சிவனடியார்களுக்கு உதவிவந்தார்.

**கலயர் திருப்பனந்தாள் சென்று அரசன் துயர் தீர்த்தல்**

அவ்வாறு அறம் செய்துவரும் அன்னாளில் சிவந்த கண்ணையுடைய வெள்ளை எருதின் மேல் வீற்றிருந்து ஆளுகின்ற திருப்பனந்தாள் இறைவனை நேரே நிற்க வைத்து வணங்க வேண்டும் என்ற ஆசை பொங்க அரசன் தன் யானை முதலியவற்றைப் பூட்டியும் இறைவனின் திருமேனி நிமிராததால், அம்மன்னன் இரவும் பகலும் நீங்காத கவலையடைந்து உள்ளம் வருந்தினான். சோழமன்னனின் வருத்தத்தைக் கேள்வியுற்று, குற்றம் இல்லாத புகழையுடைய நன்நெறியில் ஒழுகுகின்ற கலயனார், இறைவனை நேரில் கண்டு வணங்குவதற்கு திருப்பனந்தாள் வந்தார்.

"மழுப்படைச் செய்ய கையர் கோயில்கள் மருங்கு சென்று

தொழுது போந்து அன்பினோடும் தொல்மறை நெறிவ ழாமை.... **(பெ.பு.பாடல் 860)**

கலயனார் மழுப்படையைத் தம் கையிலே உடைய இறைவன் எழுந்தருளியுள்ள கோயில்களுக்குச் சென்று வணங்கினார். எல்லா உலகங்களையும் காத்துநின்று தவறாது மூன்று எரிகளையும் வளர்த்து ஓம்புபவராக விளங்கும் அந்தணர் வாழ்கின்ற செழுமையான மலர்ச்சோலை சூழ்ந்த திருப்பனந்தாள் என்ற தலத்தை வந்தடைந்தார்

சோழமன்னன் சிவபெருமான் மீது கொண்ட பேரன்பினால் எய்திய வருத்தத்தையும், யானைகளுடன் குற்றமற்ற படைகளும் தாம்செய்யும் திருப்பணி முற்றுப்பெறாமல் நிலத்தில் தளர்ந்து விழுந்து கிடப்பதையும் மாதவத்தினரான கலயனார் கண்டு மனங்கலங்கினார்.

சேனையும் யானையும் கொண்ட பெரும் படைகள் திரண்டு பணிசெய்தும் மேலெழாது நிற்கும் சிவலிங்கத் திருமேனியை இழுக்கும் பணியில் யானும் ஈடுபட்டிருக்கவேண்டும் என்று

கருதி தேன் துளிர்க்கும் கொன்றை மலர்பொருந்திய வலிமையான கயிற்றினைத் தம் கழுத்திலும், சிவபெருமானின் திருமேனியிலும் பூட்டி, தம்மை வருத்திக் கொண்டு இழுக்கலானார்.

**"மானவன் கயிறு பூண்டு கழுத்தினால் வருந்துதல் உற்றார்"** **(பெ.பு.பாடல் 862)**

அன்பு என்ற நார் கொண்டு, இயன்ற அருமையுடைய கயிற்றால் தீமை உடையார் தொண்டர் பூப்படைந்த பின்பும் கருத்துக்கு மாறுபட்டு முன்போலவே சாய்ந்துநிற்பது என்பது இறைவனுக்கு முடியுமோ? கலயனார் தம் உள்ளத்தில் எழுந்த ஒருமை அன்பைக் கண்டபோதே பெருமையுடைய இறைவன் நேரே நின்றார். வானவரும் வானத்தில் மகிழ்ச்சியினால் ஆரவாரம் செய்தனர்.

**வேந்தன் கலயர் கழல் பணிதல்**

தேவர்கள் விண்ணிலிருந்து பூமியின் மீது எங்கும் கற்பகமலர் மழை பொழிந்தனர். மன்னனின் படைகளும், யானைகளும் மேகத்தைக்கண்ட சோலைபோல மகிழ்ந்தன. மன்னன் கைகளைக் கூப்பித்தொழுது கலயனாரின் மலர்போன்ற அடிகளைத் தலைமேற்கொண்டு வணங்கினார்.

வானத்தில் பறக்கும் திரிபுரங்கள் வேதகுதிரை போன்ற தேரில் மேருமலையை வில்லாகக்கொண்டு வளைத்த சடையப்பரை, நேராக நிமிர்த்தி நிற்கும் நிலையை அடியேன் கண்டு வணங்கும்படி செய்தருளினார் மண்ணைத் தோண்டிச் சென்ற திருமாலும் தேடிக்காணமுடியாத மலர் போன்ற திருவடிகளைத் தம்மைப் போன்ற பண்புமிக்க அடியார் அல்லாது யாரால் காணமுடியும்?

**கலயர் ஞானசம்பந்தரையும், நாவரசரையும் சந்தித்தல்**

சோழமன்னன் உண்மையான தொண்டரான குங்குலியநாயனாரைத் துதித்து, அத்தலத்திலிருந்து இறைவனுக்குத் திருப்பணிகள் பல செய்து, நாட்கள் சில கழிந்த பின்னர் திருக்கடவூர் அடைந்து நிலையான தம்பணியில் ஒழுகிவரும் நாளில் ஒப்பில்லாத சீர்காழியில் தோன்றிய தலைவரான ஆளுடையபிள்ளையாரும், தாண்டகவேந்தரான ஆளுடையஅடிகளும் ஒன்றாக எழுந்தருள்வது அறிந்து, ஒப்பில்லாத மகிழ்ச்சி பொங்க அவ்விருவரையும் எதிர்கொண்டு அழைத்துவந்து, தம் இல்லத்தை அடைந்து, அளவில்லாத அன்பின்மிக்க அறுசுவை உணவும் பொருந்தவைத்து, உண்ணச்செய்து அவர்தம் திருவருளைப் பெற்றார். அடியாரின் அருளைப் பெற்றதே அல்லாமல் மணமுடைய அழகிய கொன்றை மலர் அணிந்த சிவபெருமானின் திருவருளைப்பெற்றார்.

**முடிவுரை**

"**மண்ணியசீர் திருத்தொண்டு இம்மண்ணுலகெலாம் வாழ**" – மனித குல ஒருமைப்பாடும் ஒற்றுமையும், ஆன்ம நேமும், அன்பின் இணைப்பும் குடி மழுவிய நல்லாட்சியும் மலர அடியார் பெருமக்கள் பலர் தோன்றி சைவமும் தமிழும் தழைக்கச் செய்தனர். தமிழை பக்தி மொழி என்று போற்றுவர். அவ்வகையில் பக்தியால் தமிழின் அழகை, சொல்லின் அழகை, பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவரால் இயற்றப்பட்ட பெரியபுராணத்தை வாசித்து தமிழின்பம் பெறுவோம். அன்பாலே இவ்வையம் இணைந்து வாழும் அருள் நெறியைப் போதித்த அருளாளர்களின் திருப்பணிகளைப் போற்றி வாழ்த்துவோம்.

**துணைநின்ற நூல்கள்**


1. இராமசுப்பிரமணியம்.வ.த, பெரிய புராணம், திருமகள் நிலையம், தி.நகர், சென்னை – 600017
2. மாணிக்கனார். அ. புலவர், திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணம், இரண்டாம் தொகுதி, வர்த்தமான் பதிப்பகம், தி. நகர், சென்னை – 600017
3. ஜகநாதன். கி.வா, நாயன்மார் கதை, முதல் தொகுதி, அமுத நிலையம் லிமிடெட், இராயபேட்டை, சென்னை – 600014


**References**


1. Ramasubramaniyam.V.D, Periya Puranam, Thirumagal Nilaiyam, T.Nagar, Chennai – 600017
2. Manickanar. A. Pulavar, Thiruthondar Puranam enum Periya Puranam, Part II, Varthaman Pathippagam, T.Nagar, Chennai – 600017
3. Jaganathan. Ki.Va, Nayanmar Kathai, Part I, Amutha Nilaiyam Limited, Rayapet, Chennai - 600014


**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**


**விஜயலட்சுமி. வெ " குங்குலியக் கலய நாயனாரின் ஆளுமை"** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 2, இதழ் 3, சூலை 2022, பக். 14-19


**Cite this Article in English**


**Vijayalakshmi.V " Persanolity of Kunguliya Kalaya Nayanar"** Pulam: International Journal of Tamilology Studies, Vol.2 Issue 3, July 2022, pp. 14-19